# "தொடரும்"

*எனது அன்புமிகும் நண்பரான ஹெலன் பாவர் அவர்கள் எங்கள் பிராந்திய சபைச் செய்தி மடலில் அர்க்கான்ஸாஸ் மாநிலத்தின் ஜட்ஸோனியாவில் உள்ள எங்கள் பிராந்திய சபையின் வரலாற்றை எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு வாரமும் அவர்கள் "தொடரும்" என்ற வார்த்தை யுடன் தம் கட்டுரையை முடிக்கின்றார்கள். அவ்வார்த்தை யைப் படிக்கும்போது, அவர்கள் இன்னமும் தம் தொடரை முடிக்கவில்லை என்று நாங்கள் அறிகின்றோம்; இன்னும் சில பகுதிகள் வெளிவர வேண்டியதாய் இருக்கின்றன.*

*லூக்காவின் நாட்களில் இப்படிப்பட்டதொரு இலக்கியக் கருவி பயன்பாட்டில் இருந்திருந்தால், அவர் அப். 28:31ன் வார்த்தைகளுக்குப் பின்னால் அதைப் போட்டிருப்பார், ஏனென்றால் சுவிசேஷ நற்செய்தி பரவுதல் என்ற ஊழியத்தின் தொடக்கத்தை மட்டுமே நடபடிகள் நூல் பதிவு செய்துள்ளது. அடுத்து வரும் ஒவ்வொரு சந்ததியிலும் உள்ள தேவனுடைய மக்களால் அந்தப் பணியானது "தொடர" வேண்டியதாய் இருந்தது, இருக்கின்றது மற்றும் இருக்கும்.*

*நான் இந்தத் தொடரை, "உணர்வெழுச்சி மிக்க கிறிஸ்தவம்: நடபடிகளின் புத்தகத்தைப் பற்றிய பாடங்கள்" என்று அழைக்கின்றேன், ஆனால் லூக்கா தம் எழுதுகோலை வைத்து விட்டதால் மட்டும் அந்த உணர்வெழுச்சி முடிந்து விட்டதாக நாம் நினைக்கக் கூடாது. தொடர்ந்து வந்த நாட்களில் அந்த உணர்வெழுச்சி தொடர்ந்தது; அது இன்றைய நாட்களிலும் தொடர வேண்டும்.*

*நம்மில் நடபடிகள் புத்தகத்தைப் போதிக்கின்றவர்கள் பின்வரும் பெருங்கவலை உடையவர்களாய் இருக்கின்றோம்: நடபடிகளின் பாடமானது இருபதாம் நூற்றாண்டிலும் "நீங்களும் போய் அந்தப்படியே செய்யுங்கள்" என்றிருப்பதற்கு மாறாக முதலாம் நூற்றாண்டின் வரலாறு என்ற அளவில் மட்டுமே நோக்கப்படுமோ என்று நாம் பயப்படுகின்றோம்.*

“குயீன் மேரியின் பாடத்தை” நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று யோசனை தரப்படுகின்றது.

குயீன் மேரி என்பது மாபெரும் கப்பல்களில் ஒன்று ஆகும். தொடக்கத்தில் அது தனிச் சிறப்பானதொரு பயணிகளின் கப்பலாக இருந்தது. இரண்டாம் உலகப் போரின் போது, அது போர்க் கப்பலாகும்படிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது; அதனால் அக்கப்பல் தொடர்ந்து நாஜிகளின் நீர் மூழ்கிக் கப்பல்களினால் அச்சுறுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. இந்நாட்களில், அக்கப்பலானது கலிஃபோர்னியாவின் லாங்பீச் என்ற கடற்கரையில் நிறுத்தப்பட்டுள்ளது. அதனுடைய பெரிய என்ஜின் மற்றும் இருந்த பயண உபகரணங்கள் யாவும் அகற்றப்பட்டு விட்டன. அதன் மேல் தளத்தில் நினைவுப் பொருட்கள் விற்கும் கடைகள் வரிசையாக அமைந்துள்ளன. பெரிய அறைகள் கூட்டங்கள் நடத்தப் பயன்படுகின்றன; கேபின்கள் போலுள்ள சிறு அறைகள் விடுதி அறைகள் போல வாடகைக்கு விடப்படுகின்றன. மாலுமிகளின் பாகங்களை நடிகர்கள் ஏற்று நடிக்கின்றார்கள். மாபெரும் கடற்கலம் ஒன்று அருங்காட்சியகத்தில் வைக்கும் பொருளாய் ஆகிவிட்டது.

நடபடிகள் பற்றிய நமது பாடத்தில், கர்த்தருடைய சபையானது தொடக்கம் பெற்றதை நாம் கண்டிருக்கின்றோம். தேவனுடைய மக்கள் சுவிசேஷ நற்செய்தியை எடுத்துக் கொண்டு மக்கள் நிறைந்த உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்ற அதன் மகத்தான ஆரம்பம் எப்படியிருந்தது! நாம் எச்சரிக்கையாய் இருக்கவில்லையென்றால் சபையானது (உலகத்தில் நன்மைக்காகத் தொடர்ந்து இயங்கும் தேவனுடைய சக்தியாய் இருப்பதற்கு மாறாக), ஒரு அருங்காட்சியகப் பொருளாகிவிடுவதற்கு - கடந்த காலத்தின் ஒரு நினைவுச் சின்னமாகி விடுவதற்கு - வாய்ப்புண்டு!

நமது தொடரின் இந்தக் கடைசிப் பாடத்தில், லூக்கா விட்ட இடத்தில் நான் தொடங்க விரும்புகின்றேன். பவுலுக்கு என்ன நேர்ந்தது என்ற நமது ஆர்வத்தைத் திருப்திப் படுத்துவதற்காகவும் (இதைப் பற்றி நாம் உண்மையாயிருக்க வேண்டும்) இதை நான் எழுதுகின்றேன். இருப்பினும் நமது ஆர்வத்தை திருப்திப்படுத்தும் செயலை லூக்கா பெரிதும் அக்கறைக்குரிய விஷயமாக எடுத்துக் கொண்டதில்லை,

*எனக்கும் அது முதன்மை நோக்கம் அல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக, சபையின் ஒவ்வொரு உறுப்பினரும், பல காலங் களுக்கு முன்பாகப் பவுலினாலும், விசுவாசமுள்ள கிறிஸ்தவர் களாலும் தொடங்கப் பெற்ற மாபெரும் ஊழியத்தைத் தனிப்பட்ட முறையில் தொடர்ந்து நிறைவேற்ற ஏவுதல் பெற வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.*

## பவுலின் தொடர்ந்த நடபடிகள்

*அப். 28:31க்குப் பிறகு பவுலுக்கு என்ன நடந்தது? "சபை வரலாற்றின் தந்தை'' என்று அழைக்கப்படும் ஈசுபியஸ் அவர்கள், "அந்த அப்போஸ்தலர் தம்மை வெற்றிகரமாய்த் தற்காத்துக் கொண்ட பிறகு, சுவிசேஷத்தை அறிவிக்க மறுபடியும் புறப்பட்டுச் சென்றார் என்று தற்சமயத்தில் அறிக்கை தரப்படுகின்றது. அவர் பிறகு இரண்டாம் முறையாக மறுபடியும் ரோமாபுரிக்கு வந்தார், நீரோவினால் மரண தண்டனை பெற்றார்" என்று எழுதினார்* (Eusebius *Ecclesiastical History* 2:22). *உண்மைகள், அவைகளை நாம் அறிந்துள்ளபடி பவுல் இருமுறை ரோமாபுரியில் சிறைப்பட்டார் மற்றும் இவ்விரு சிறையிருப்புக்களின் மத்தியில் அவர் இன்னொரு பயணம் மேற்கொண்டார் என்ற விஷயங்களுடன் ஒத்துப் போகின்றன:*

*முதலாவதாக, ''சிறை நிருபங்களுக்கும்'' (எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர் மற்றும் பிலேமோன்) மற்றும் 2 தீமோத்தேயு நிருபத்திற்கும் இடையில் பல வேறுபாடுகள் இருக்கின்றன. பவுல் 2 தீமோத்தேயு நிருபத்தை எழுதிய போது, அவர் சிறையிலும் இடப்பட்டிருந்தார் (2 தீமோ. 1:8; 2:9). ஆனால் அந்த நிருபத்திற்கும் சிறை நிருபங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை நாம் கவனிப்போம்: சிறை நிருபங் களின் தொனியானது அடிப்படையில் மகிழ்ச்சியுள்ளதாய் இருக்கின்றது, ஆனால் 2 தீமோத்தேயு நிருபத்தின் தொனி யானது அடிப்படையில் துயரம் நிறைந்துள்ளது. பவுல் சிறை நிருபங்களை எழுதிய போது தம் நண்பர்களால் சூழப்பட்டி ருந்தார்; ஆனால் அவர் 2 தீமோத்தேயு நிருபத்தை எழுதிய போது, லூக்காவைத் தவிர மற்ற யாவராலும் கைவிடப்பட்ட*

*நிலையில் இருந்தார் (2 தீமோ. 4:11). பவுல் சிறை நிருபங்களை எழுதிய போது, தாம் விடுதலையாக்கப்படுவதை எதிர்பார்த்திருந்தார் (பிலி. 1:25, 26; 2:24; பிலே. 22); முந்திய பாடத்தில் குறிப்பிட்டபடி, கர்த்தரின் சித்தம் அதுவானால் பவுல் இறக்கத் தயாராய் இருந்தார், ஆனால் அவர் தாம் விடுவிக்கப்படுவதை எதிர்பார்த்திருந்தார். ஆனால் அவர் 2 தீமோத்தேயு நிருபத்தை எழுதிய பொழுது, தாம் மரிக்கப் போவதை எதிர்பார்த்திருந்தார் (2 தீமோ. 4:6, 7). இவைகளும், மற்ற வேறுபாடுகளும் சேர்ந்து, பவுல் ஒரு முறையல்ல இருமுறை ரோமாபுரியில் சிறைப்பட்டிருந்தார் என்றும் நம்பும்படி நம்மை வழி நடத்துகின்றன.*

*இரண்டாவதாக, தீமோத்தேயு மற்றும் தீத்துவுக்கு எழுதிய நிருபங்களில் விளக்கப்படும் சில நிகழ்ச்சிகள் மற்றும் பயணங்கள் ஆகியவை நடபடிகளின் நாள் வரிசை விபரத்தில் இடம் பெறவில்லை.* J.W. *மெக்கார்வி அவர்கள் பல உதாரணங்களை அட்டவணைப்படுத்தினார்:*

> *இவைகளில், வேற்றுமையான போதகங்களைப் போதிப்பவர்களை எதிர்த்து நிற்பதற்காக அவர் தீமோத்தேயுவை எபேசுவில் விட்டு வந்ததும் அப்பொழுது அவர் மக்கெதோனியாவிற்குச் சென்றதும் (1 தீமோ. 1:3); குறைவாயிருக்கிறவைகளை நிறைவாக்கும்படிக்குத் தீத்துவை கிரேத்தாத் தீவிலே விட்டு வந்ததும் (தீத்து 1:5); மிலேத்துவுக்குச் சென்றபொழுது அவர் அங்கு துரோப்பீமுவை வியாதிப்பட்டவராக விட்டு வந்ததும் (2 தீமோ. 4:20); மாரிக் காலத்தில் தங்குவற்காக அவர் நிக்கொப்போலி நகருக்குப் பயணம் சென்றதும் (தீத்து 3:12) சில நிகழ்ச்சிகளாகும்.*[1]

*இறுதியாக, பவுல் தம் முதல் சிறையிருப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு, அதை தொடர்ந்து பயணங்கள் மேற்கொண்டதற்கு தொடக்க காலத்தில் இருந்த ஏவப்பட்டிராத எழுத்தாளர்கள் குறிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். எடுத்துக்காட்டாக, ரோமாபுரியைச் சேர்ந்த கிளெமென்ட் என்பவர்* (ca. *கி.பி. 96), பவுல் "இந்த உலக முழுவதிலும் நீதியைப் போதித்தார்" மற்றும் "மேற்கின் கடையெல்லை வரை" சென்றடைந்தார் என்று கூறினார் (1* Clement *5). ரோமாபுரியின் கிளெமென்ட்* (ca. *30-100) அப்போஸ்தலிக்கப்*

*பிதாக்களில் மிகவும் முக்கியமானவராவார். மியூரட்டோரியன் கட்டளை (ca. கி.பி. 170-190) என்ற நூலில் பவுல் "[ரோமாபுரி] நகரில் இருந்து ஸ்பெயினுக்குச் சென்ற" பயணம் பற்றிப் பேசப்பட்டது. இப்படிப்பட்ட குறிப்புகள் ஏவப்பட்டவைகள் அல்ல; ஆனால் வசன ஆதாரத்தின் வெளிச்சத்தில் இவை களைக் கண்ணோக்கும் பொழுது இவைகள் முக்கியத் துவம் பெறுகின்றன.*

*கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களில் இருந்து, அப். 28:31க்குப் பிறகு தொடர்ந்து நடந்திருக்கக் கூடிய நிகழ்ச்சி களை நாம் ஒன்று கூட்ட முடியும். ஏதோ ஒரு கால கட்டத்தில் (ஒருவேளை நடபடிகள் நிகழ்ச்சி முடிந்த உடனே) பவுல் கடைசியில் நீரோ முன்னிலையில் நின்று தற்காப்பு வாதம் செய்தார் (அப். 27:24). நீரோவே "இராயருக்கு அபயமிடும்" எல்லா வழக்குகளையும் சொந்தமாய் விசாரணை செய்த தில்லையாகையால், பவுல் அவர் முன்னிலையில் நின்றிருப் பாரா என்று சிலர் சந்தேகப்படுகின்றார்கள். சிலர், எருசலேமி லிருந்த யூதர்கள் அவ்வழக்கை வலியுறுத்தாமல் விட்டு விட்டதால் விசாரணையின்றியே பவுல் விடுவிக்கப்பட்டு விட்டார் என்று நினைக்கின்றார்கள். இருப்பினும் தூதன் பவுலிடத்தல், "நீ இராயனுக்கு முன்பாகவும் நிற்க வேண்டும்" என்று கூறியிருந்ததால், அவர் இராயருக்கு முன் நின்றது உறுதி என்றே நான் நினைக்கின்றேன். பேலிக்ஸ், பெஸ்து மற்றும் அகிரிப்பா ஆகியோர் முன்னிலையில் அந்த அப்போஸ்தலர் நிகழ்த்திய பேருரைகளே அவருடைய தற்காப்பு வாதத்தின் புறக்குறிப்பாக இருந்திருக்கலாம். நீரோவின் மறுசெயல் பற்றி நாம் அறிவதில்லை, ஆனால் ஒரு விஷயம் உறுதியானதாகும்: அவர் தம் பாவம் நிறைந்த வாழ்வு முறையை விட்டுவிட்டு, ஒரு கிறிஸ்தவராவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் பெற்றிருந் தார்!*

*விசாரணையின் போது, ஆளுநர் பெஸ்து மற்றும் நூற்றுக் கதிபதி யூலியு ஆகியோரின் பாராட்டு அறிக்கைகள் பவுலுக்குச் சாதகமாய் இருந்திருக்க வேண்டும். அவர் குற்றமற்றவர் என்று கூறப்பட்டு கி.பி. 62ல் விடுவிக்கப்பட்டார் என்பது தெளிவு.*

*ஸ்பெயின் சென்று கிறிஸ்துவைப் பிரசங்கிக்க வேண்டும் என்பது பவுலின் நீண்ட நாள் கனவாக இருந்தபடியால்*

*(ரோமர் 15:24, 28) இதுவே அவரது முதல் அடைவிடங்களில் ஒன்றாக இருந்திருக்கும் (வரைபடத்தை ப. 64ல் காணவும்). அவர் தீத்துவை விட்டு வந்திருந்த கிரேத்தா தீவுக்கும், துரோப்பீமுவை வியாதியாளராய் விட்டு வந்திருந்த மெலித்தா தீவுக்கும் (2 தீமோ. 4:20) சென்றிருப்பார் என்பது உறுதி (தீத்து 1:5). மிலேத்துவில் இருந்து அவர் தம்முடைய நண்பரான பிலேமோனைச் சந்திக்க உள்நாட்டில் கொலோசெ பட்டணம் வரை சென்றிருக்க முடியும் (பிலே. 22). அவர் எபேசுவில் இருந்த மூப்பர்களை மறுபடியும் காண்போம் என்று நினைத்த தேயில்லை (அப். 20:25). அவர்களைச் சந்திப்பதற்குத் தேவன் மறுபடியும் ஒரு வாய்ப்பைக் கொடுத்தபோது அவர் எவ்வள வாய்ச் சந்தோஷம் அடைந்திருக்க வேண்டும்! (1 தீமோ. 1:3ஐக் காணவும்). பவுல் தாம் மக்கெதோனியாவுக்குச் செல்லுகையில், எபேசுவில் இருந்த சபைக்கு உதவும்படியாகப் பவுல் தீமோத்தேயுவை அங்கு விட்டுச் சென்றார் (1 தீமோ. 1:3).*

*பவுல் மக்கெதோனியாவுக்குச் செல்லும் வழியில் துரோவா வில் நின்றார். அங்கு அவர் தம் நண்பர் ஒருவரிடம் மேலங்கி, மற்றும் தம் தோற்சுருள்கள் ஆகியவற்றை பிற்பாடு வந்து எடுத்துக் கொள்ளும் நோக்கத்துடன் வைத்து விட்டுச் சென்றார் (2 தீமோ. 4:13). அந்த அப்போஸ்தலர் மக்கெதோனியாவுக்குச் சென்ற பொழுது, நிச்சயமாகவே அவர் பிலிப்பியில் இருந்த தமக்கு அன்பானவர்களுடன் முடிந்த அளவுக்கு அதிக நேரத் தைச் செலவிட்டிருப்பார் (பிலி. 2:23, 24). மக்கெதோனியாவின் வழியே பயணம் செய்கையில் அவர் தீமோத்தேயுவுக்குத் தமது முதல் நிருபத்தையும், தீத்துவுக்கு நிருபத்தையும் எழுதியிருக் கலாம். இதற்கு முன் பவுல் எபேசுவில் இருந்த போது தீத்துவுக்கு நிருபம் எழுதியதாகச் சிலர் நம்புகின்றார்கள். ஏறக்குறைய எழுபது வயதாய் இருந்த பவுல் தாம் இறக்கும் பொழுது ஊழியம் தொடர்ந்து நடைபெற வேண்டி இளைஞர்களைத் தயார் செய்து கொண்டிருந்தார். 1, 2 தீமோத்தேயு மற்றும் தீத்து ஆகிய நிருபங்கள் பெரும்பாலும்* “the pastoral epistles” *என்று அழைக்கப் படுகின்றன. ஏனென்றால் நாமகரணக் கூட்டத்தின் ஊழியக் காரர்களுக்கு* "Pastors" *என்ற பட்டம் தரப்படுவது வழக்கமாய் இருக்கின்றது. இருப்பினும் நாம் கண்டுள்ளபடி* "pastor" *என்ற*

*சொற்றொடரானது வேதாகமத்தில் ஊழியர்களுக்கல்ல, ஆனால் மூப்பர்களுக்கே பயன்படுத்தப்படுகின்றது ("அப்போஸ்தலரின் நடபடிகள்" 4ம் பாகத்தில் 20:28க்கான குறிப்புகளைக் காணவும்). 1, 2 தீமோத்தேயு மற்றும் தீத்து ஆகிய நிருபங்களை நற்செய்தி ஊழியத்தின் நிருபங்கள்" என்று அழைப்பதே மிகவும் சிறப்பானதாகும். பவுல் கொரிந்துவுக்கும் சென்றிருக்கலாம் (2 தீமோ. 4:20), ஆனால் மேற்கு கிரேக்கத்தில் இருந்த ரோமக் குடியேற்றப் பட்டணமான நிக்கொப்போலி என்ற நகரே அவரின் நிறைவான அடைவிடமாய் இருந்தது. அங்கு குளிர்காலத்திற்காகத் தங்கியிருக்க அவர் திட்ட மிட்டார் (தீத்து 3:12).*

*பவுல் பயணம் செய்து பிரசங்கிக்கையில், ரோமாபுரியில் மிக முக்கியமான நிகழ்ச்சிகள் நடந்தன - அந்த நிகழ்ச்சிகளின் விளைவாகப் பவுல் மறுபடியும் கைது செய்யப்பட்டு, இறக்க நேரிட்டது. கி.பி. 64ல் ஜுலை 18ம் நாள் தலைநகரில் தீப்பிடித்தது.*

> *நகரின் ஏழ்மை மிக்க பகுதியில் தொடங்கிய நெருப்பானது ஆரவாரத்துடன், படபடத்து, பேரொலியுடன் ஒன்பது நாட்களாக எரிந்தது. நகரானது பதினான்கு பகுதிகளாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது, அவைகளில் பத்துப் பகுதிகள் எரியூட்டப் பட்டு முற்றிலும் அழிக்கப்பட்டன. அரண்மனைகள், ஆலயங் கள் மற்றும் பீடங்கள் யாவும் சாம்பலாயின. 200,000 மக்களைக் கொள்ளக் கூடிய* Circus Maximus *என்ற இடம் கூட அழிக்கப் பட்டது* (Paul Rogers, "At the End of Paul's Life").

*தற்காலத்திய வரலாற்றாளர்கள் பலர் நகரத்தைத் தீக்கிரை யாக்கியதாக நீரோவின்மேல் பழி சுமத்துவதில்லை; தற்செய லாகவே இந்தத் தீப்பிடித்தலானது தொடங்கியிருக்கும். இருப்பினும் ரோமாபுரியில் இருந்த கோபம் கொண்ட குடிமக்கள், தலைநகரை மறுபடி கட்ட வேண்டும் என்று நீரோ கொண்டிருந்த பேராவல் மிக்க திட்டங்களை அறிந்திருந்த தால், பேரரசரைக் குற்றம் சாட்டத் தொடங்கினார்கள். நீரோ தம்மீது அவர்கள் கொண்டிருந்த கவனத்தைத் திருப்புவதற்காக சபையைப் பலியாடு ஆக்கினார். ரோம வரலாற்றாளரான டேசிட்டஸ் (கி.பி. 55-120) அவர்கள் நீரோவின் செயல்கள் பற்றிப் பின்வருமாறு எழுதினார்:*

*வதந்தியில் இருந்து விடுபடுவதற்காக நீரோ தமது இடத்தில் ... பொதுமக்களால் வெறுக்கப்பட்ட மனிதர்களை வைத்து ... அவர்களைக் கிறிஸ்தவர்கள் என்றழைத்து ... அவர்களைக் குற்றவாளிகள் ஆக்கினார். அவர்களுக்குக் காட்டு விலங்கு களின் தோல் உடுத்தப்பட்டு, நாய்களால் கடிபட்டோ அல்லது நெருப்பினாலோ அல்லது சிலுவைகளினாலோ அழிக்கப் பட்டார்கள் ... பகல் வெளிச்சம் மங்கும் வேளையில், இரவில் வெளிச்சம் தருவதற்காக அவர்கள் எரிக்கப்பட்டார்கள். அக்காட்சியைக் காண்பதற்காகத் தமது தோட்டத்தைத் திறந்து வைத்த நீரோ அதை ஒரு சர்க்கஸ் நிகழ்ச்சி போலவே கொடுத்துக் கொண்டிருந்தார் ...* (Quoted in Vera E. Walker, *A First Church History*).

*நீரோ, கிறிஸ்தவர்களின் தலைகளை வெட்டுதல், சிங்கங் களுக்குத் தூக்கியெறிதல், உயரமான கல் தூணில் இருந்து தூக்கி எறிதல் போன்றவைகளைச் செய்வித்தார் என்றும் டேசிட்டஸ் அறிக்கை தந்துள்ளார்.*

*இவ்விதமாக விசுவாசிகளுக்குத் தவறான முறையில் தண்டனை தொடங்கியது. விசுவாசத்தை அறிவிப்பவர்களின் மித முந்திய முன்னோடிகளில் ஒருவர் என்ற வகையில் பவுல் இவ்வித உபத்திரவத்திற்கு உட்படுத்தப்படுவதில் முக்கிய இலக்காக இருந்திருக்க வேண்டும். ஏறக்குறைய கி.பி. 67ல், ஒருவேளை நிக்கொப்போலியில் (தீத்து 3:12) அவர் பிடிக்கப் பட்டு, ரோமாபுரிக்கு இழுத்து வரப்பட்டிருக்கலாம். இந்தச் சிறையிருப்பின்போது, பவுல் இதற்கு முன் செய்தது போல (அப். 28:30) "தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே" குடியிருக்கவில்லை. அதற்குப் பதில், அவர் மேமர்டைன் சிறை யில் - இது மாசு படிந்த ஒரு கற்குழியாகும், உயரத்தில் கற்சுவரி னிடையே காற்றோட்டத்திற்கென்று வெளிச்சத்திற்கென்றும் ஒரு சிறு துளை வெட்டப்பட்டிருக்கும் - அடைக்கப்பட்டதாக முற்காலத்திய எழுத்தாளர்கள் நமக்குக் கூறுகின்றார்கள்.*

*அந்த மங்கிய வெளிச்சத்தில், முகமறியாத நன்கொடை யாளரால் தரப்பட்ட எழுதுகோல் மற்றும் தோல் சுருளைப் பயன்படுத்தி, பவுல் தமது கடைசி வார்த்தைகளைத் தம் அன்புக்குரிய தீமோத்தேயுவுக்கு எழுதினார். ரோமக்குடிமகன் என்ற வகையில், அந்த அப்போஸ்தலர் நீதிமன்றத்தில் தம் நாளின்போது அனுமதிக்கப்பட்டார், ஆனால் அவர் தமக்கு*

உதவி செய்பவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, அவரது விரோதிகளால் பொய் குற்றம் சாட்டப்பட்டிருந்ததால் இரண்டாம் முறை அவர் குற்றத்தில் இருந்து விடுவிக்கப்படுதலில் சிறிதளவே நம்பிக்கை கொண்டிருந்தார் (2 தீமோ. 4:16).[2] மரணம் உடனடியாக நேரும் என்று நம்பிய அவர் (2 தீமோ. 4:6-8), அந்த இளம் பிரசங்கியாரிடத்தில் வேண்டுகோள் விடுத்தார்:

> நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதைப்படு ... மாற்குவை உன்னோடு கூட்டிக் கொண்டு வா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன் ... துரோவா பட்டணத்திலிருக்கிற கார்ப்பு என்பவன் வசத்தில் நான் வைத்து வந்த மேலங்கியையும், புஸ்தகங்களையும், விசேஷமாய்த் தோற்சுருள்களையும், நீ வருகிறபோது எடுத்துக் கொண்டு வா (2 தீமோ. 4:9-13).
>
> மாரிக்காலத்துக்கு முன் நீ வந்து சேரும்படி ஜாக்கிரதைப்படு (2 தீமோ. 4:21).

மழைக்காலத்தின் போது, பயணம் செய்வது முடியாது, மற்றும் அதைத் தொடர்ந்து வரும் வசந்த காலம் வரையில் தாம் உயிருடன் இருப்போம் என்று பவுல் எதிர்பார்க்கவில்லை.

ஏவப்பட்டிராத ஒரு பாரம்பரிய வரலாற்றின்படி,[3] பவுல் கி.பி. 67/68ல் ரோமாபுரியில் தலை வெட்டப்பட்டார். தண்டனை நிறைவேற்றுபவர் பவுலின் தலையை உடலில் இருந்து பிரித்த போது, கடைசியாக அந்த முதிர் வயதான அப்போஸ்தலருடைய ஆத்துமா கர்த்தரிடமாய்ச் செல்லும்படி விடுதலையாயிற்று (பிலி. 1:23). அவருக்கு நாம் பிரியாவிடை கொடுக்கையில் - நம் பிரியாவிடையானது நாம் அவரை மறுபடியும் பரலோகத்தில் சந்திக்கும் வரையிலே ஆனதாகும் - பின்வரும் அவரது வார்த்தைகள் நமது சிந்தைகளில் தங்குகின்றன:

> ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப் பட்டுப் போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள

*நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்ன மாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் (2 தீமோ. 4:6-8).*

## முதல் நூற்றாண்டில் இருந்த மற்ற கிறிஸ்தவர்களின் தொடர்ந்த நடபடிகள்

நடபடிகள் புத்தகத்தின் பிற்பாதியில், லூக்கா பவுலின் ஊழியத்தையே முக்கியமாகப் பதிவு செய்தார். இது, மற்றெங்கும் இருந்த கிறிஸ்தவர்கள் சோம்பேறிகளாய் இருந்தார்கள் என்று அர்த்தப்படுவதில்லை. பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் தொடர்ந்து பயணம் செய்து இயேசு வைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார்கள் (அப். 9:32). ஏவப் பட்டிராத பாரம்பரிய வரலாற்றொன்றின்படி, அப்போஸ் தலர்கள் சுவிசேஷத்துடன், உலகின் நாகரிகம் பெற்ற பகுதிகள் பலவற்றிற்கும் அதிகமாய்ச் சென்றார்கள். இது அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட கட்டளையின்படியானதாயிருந்தது (மத். 28:18-20; மாற். 16:15, 16; அப். 1:8) மற்றும் இது கொலோ சேயருக்குப் பவுல், "... அந்த சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப் பலன் தருகிறது போல, உங்களிடத்திலும் வந்து ..." என்று கூறியதன்படியாகவும் இருந்தது (கொலோ. 1:5, 6). இது அப்போஸ்தலருடைய நடபடிகளின் பிற்பகுதியில் உள்ள உண்மைக்கும் ஏற்புடையதாகும், அப்போஸ்தலர்களில் பெரும்பாலோர் எருசலேமில் இருக்கவில்லை என்பது உறுதியாகும்.

அப்போஸ்தலராகிய யோவான் எபேசுவில் தமது அந்திம வருடங்களின் பெரும்பகுதியைக் கழித்தார் என்று ஆதிக் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் கூறினார்கள். பேதுரு, அந்தியோ கியா (கலா. 2:11) மற்றும் பாபிலோன் (1 பேது. 5:13)[4] வரைக்கும் பயணம் செய்தது உறுதி என்று நாம் அறிகின்றோம். அப்போஸ்தலரல்லாத மற்றவர்களும் கூட நற்செய்தியைப் பரப்பிக் கொண்டிருந்தார்கள் (அப். 11:9). அப்பொல்லோ

போன்ற பிரசங்கியார்கள் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள் (1 கொரி. 16:12; தீத்து 3:13). குறைந்த பட்சம் ஒரு பயணத்திலாவது, பேதுரு, பவுலின் முந்திய பயணத் துணையாளர்களான சீலா மற்றும் மாற்குவுடன் இணைந்து சென்றிருந்தார் (1 பேது. 5:12, 13).

பவுலைப் போலப் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப் பட்ட மனிதர்கள் விசுவாசத்தைக் கட்டியெழுப்பிக் கிறிஸ்தவர் களைப் பெலப்படுத்துவதற்காகத் தங்கள் வார்த்தைகளை எழுதி வைத்தார்கள். லூக்கா தமது சுவிசேஷ நூலையும், நடபடிகள் நூலையும் 60களின் முற்பகுதியில் எழுதினார். ஏறக்குறைய அதே வேளையில், மத்தேயுவும் மாற்குவும் கிறிஸ்துவின் வாழ்வு குறித்துத் தங்களின் விபரங்களைப் பதிவு செய்தார்கள். சபையில் இருந்த ஏவுதல் பெற்ற முன்னோடிகள் பவுலைப் போலவே கிறிஸ்தவர்களுக்கும், சபைகளுக்கும் நிருபங்கள் எழுதினார்கள்: இயேசுவின் அரை சகோதரரான யாக்கோபு, நடைமுறைக் கிறிஸ்தவம் பற்றி யூத கிறிஸ்தவர் களுக்கு ஒரு நிருபம் எழுதினார். இயேசுவின் இன்னொரு அரை சகோதரரான யூதா (அல்லது யூதாஸ்), கிறிஸ்தவர்கள் "விசுவாசத்திற்காகத் தைரியமாய்ப் போராட வேண்டும்" (யூதா 3) என்று வலியுறுத்தி ஒரு நிருபம் எழுதினார். பேதுரு தாம் மரணமடைவதற்குச் சற்றுக்காலம் முன்னதாக (2 பேது. 1:13-15) இரண்டு நிருபங்களை எழுதினார்: முதலாவது, உபத்திரவத்தைச் சந்தோஷமாய் அனுபவிப்பது பற்றியும், இரண்டாவது கள்ள உபதேசத்திற்கெதிராகக் கிறிஸ்தவர்களை எச்சரிப்பது பற்றியும் எழுதப்பட்டவைகளாகும். மேலும் பேதுரு தம்முடைய இரண்டாவது நிருபத்தில் பவுலின் எழுத்துக்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார் (2 பேது. 3:15, 16). இந்த நான்கு நிருபங்களும் - யாக்கோபு, 1 மற்றும் 2 பேதுரு மற்றும் யூதா ஆகிய நிருபங்கள் - அநேகமாக 60களில் எழுதப்பட்டிருக்கலாம். (யாக்கோபு நிருபமானது கி.பி. 44க்கும் கி.பி. 62க்கும் இடைப்பட்ட காலத்தில் எப்பொழுதாவது எழுதப்பட்டிருக்கலாம்.)

முதல் நூற்றாண்டின் முடிவு காலத்தில் எழுந்திருந்த சில விசேஷித்த பிரச்சனைகளைக் கையாளுவதற்காக அப்போஸ் தலராகிய யோவான் தம்முடைய ஐந்து புத்தகங்களை

எழுதினார். கிறிஸ்துவானவர் "மாம்சத்தில்" வந்திருந்ததில்லை என்பது தவறான போதனை என்று அவருடைய சுவிசேஷ நூலானது வெளிப்படுத்தியது (யோவா. 1:1, 14; 2 யோவா. 7ஐக் காணவும்). கிறிஸ்தவர்களுக்கு அவரின் முதல் நிருபமானது அந்தத் தவறின் (தவறான போதனையின்) நடைமுறை விளைவுகளைப் பற்றி விவாதம் செய்தது (1 யோவா. 1:1; 2:1). அவரது இரண்டாம் மற்றும் மூன்றாம் நிருபம் தனிநபர்களுக்கு அனுப்பப்பட்ட குறிப்புகளாகும்; அக்கறைக்குரிய மற்ற விஷயங்களுடன் அவைகள் தவறாகப் போதிப்பவர்களுக்கு எதிர்த்து நிற்கும்படி ஊக்குவித்தன (2 யோவா. 7-11). புதிய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகத்தையும் யோவான் எழுதினார், ஆனால் இந்நூலைப் பொறுத்தமட்டில் அவர் அடிப்படையில் கர்த்தருடைய செயலாளராகவே இருந்தார் (வெளி. 1:1, 9-11). அந்த இறுதியான புத்தகமானது - வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகமானது - உபத்திரவப்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்துவதற்கானதாகும் (வெளி. 2:10).

தொடக்க முதலாய் சபையானது உபத்திரவப்படுத்தப்பட்டு வந்தது. பவுலுடன், இன்னும் பலர் தங்கள் விசுவாசத்திற்காக முதல் நூற்றாண்டில் மரணமடைந்தார்கள். சபை தொடங்கிய முதல் பத்தாண்டுகளில் அது யூதர்களால் பிரதானமாய் உபத்திரவம் அடைந்தது. யூத ஆலோசனைச் சங்கத்தாரால் ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டதை நமது பாடங்களில் நாம் கண்டோம்; சவுல் சபையை உபத்திரவப்படுத்திய காலத்தில் கிறிஸ்தவ ஆண்கள் மற்றும் பெண்களைக் கொல்லுவித்தார்; அப்போஸ்தலரான யாக்கோபு ஏரோது இராஜாவால் தலை வெட்டப்பட்டார் (அப். 7:58-60; 22:4; 26:10; 12:2). ஏவப்பட்டிராத பாரம்பரிய வரலாற்றின்படி, இயேசுவின் அரை சகோதரரான யாக்கோபும் யூதர்களின் கைகளினால் மரித்தார்:

> நிறைவாக அவர் [எருசலேமில்] இருந்த பணக்கார, ஒழுக்கம் கெட்ட யூதர்களின் கோபத்தைச் சம்பாதித்தார். சட்டத்தை மீறுபவர் என்ற சாக்குக் கூறப்பட்டு அவர்கள் அவரை ஆலயத்தின் [கூரை] மீதிருந்து [கீழே] வீசியெறிந்து, கல்லெறிந்தார்கள், பிறகு அவரது உயிர் வாழ்வைக் கனத்த தடியினால் முடித்தார்கள். அவர் தம்மைக் கொலை செய்தவர்

களுக்காகத் தம் உதடுகளில் ஜெபத்துடன் மரித்தார் என்று கூறப்படுகின்றது.

பின்னாளில், கி.பி. 64/65ல் சபையைத் துன்புறுத்துவதில் முதன்மையாய் இருந்த நீரோவின் உபத்திரவத்துடன் ரோம அரசினால் சபை துன்பப்படுதல் தொடங்கியது.[5] தவறாக நடத்தப்படுதல் பற்றிய பேதுருவின் நிருபங்கள் நீரோவின் உபத்திரவப்படுத்துதலின்போது எழுதப்பட்டிருக்கலாம். ஏவப்பட்டிராத பாரம்பரிய வரலாற்றின்படி, கொடூரமான அக்காலத்தில் அப்போஸ்தலர்களில் பலர் மரணம் அடைந்தார்கள் - நடபடிகளின் பாடத்தில் நாம் படித்தறிந்தவர்களும் மரணம் அடைந்தார்கள். சவுக்கால் அடிக்கப்பட்டு சிலுவையில் அறையப்படும்படி தண்டனை பெற்ற பேதுருவின் மரணமானது மிக நன்கறியப்பட்ட ஒரு பாரம்பரிய வரலாறு ஆகும். இவ்வரலாற்றின்படி, பேதுரு தம் கர்த்தர் மரித்த முறையில் மரிப்பதற்குத் தாம் தகுதியற்றவர் என்று நம்பியதால், தம்மைத் தலை கீழாகச் சிலுவையில் அறையும்படி கேட்டுக் கொண்டார்.

முதலில் கிறிஸ்தவர்கள் என்பதற்காக இல்லாமல் குறிப்பிட்ட குற்றங்களுக்காகவே கிறிஸ்தவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். தீ வைத்தல் என்ற தொடக்க குற்றத்துடன் கூடுதலாக, கிளர்ச்சி செய்தல், மாயவித்தை செய்தல், சட்ட விரோதமான பாலுறவு மற்றும் மனித மாமிசத்தை உண்ணுதல் என்ற குற்றச்சாட்டுகளும் கூட சுமத்தப்பட்டன. கிறிஸ்தவ உபதேசங்களை மக்கள் தவறாகப் புரிந்து கொண்டதால் இவ்விதக் குற்றச்சாட்டுகள் எழும்பின: இராஜ்யத்தைக் குறித்த போதனையானது கிளர்ச்சி என்னப்பட்டது; ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்தியது மாயவித்தை என்னப்பட்டது; மற்ற கிறிஸ்தவர்கள்மேல் கொண்ட அன்பு சட்ட விரோதமான மாமிசத்தை உண்ணுதல் என்னப்பட்டது. மற்ற மதங்களையும் தேவர்களையும் கிறிஸ்தவர்கள் சகித்துக் கொள்ளாதிருந்த செயலானது சமுதாயத்தில் கிறிஸ்தவத்திற்கிருந்த வெறுப்பின் மையமாயிற்று. இயேசுவைப் பின்பற்றியவர்கள் "நாத்திகர்கள்" என்றும் "மனிதகுலத்தை வெறுப்பவர்கள்" என்றும் முத்திரை குத்தப்பட்டார்கள். விரைவிலேயே இயற்கையாகவோ அல்லது மனிதனாலேயோ நடந்த ஒவ்வொரு அழிவிற்கும்

கிறிஸ்தவர்கள்தான் காரணம் என்ற குற்றம் சுமத்தப்பட்டது. அவர்களைக் குற்றவாளிகளாகத் தீர்மானிப்பதற்கு ஆதாரம் எதுவும் தேவையில்லாதிருந்தது:

> [நீரோவின் உபத்திரவப்படுத்துதலின்] தொடக்கத்திருந்தே, விசாரணை ஒன்று தேவைப்பட்டது, ஆனால் [பல குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்ததன்] விளைவாக விரை விலேயே விசாரணையில் கிறிஸ்தவர்களை "odium generis humani [மனித குலத்தின் மீது வெறுப்புடமை] என்ற கொள்கை உடைய சமூகம் என்று அறியப்பட்டது" மிக உதவியாயிற்று. விசாரணையொன்று தேவையற்றதாயிற்று; அந்த மார்க்கமே குற்றங்களில் ஈடுபடக் கூடியதென்னப்பட்டது … (S. Angus, "Roman Empire," ISBE).

ரோம அரசினால் இரண்டாவதாகப் பொதுவான உபத்திரவமானது டொமீஷியன் பேரரசரால் விளைவிக்கப் பட்டது:

> டொமீஷியன் என்ற (c. 81-96) பேரரசன் பேரரசு முழு வதையும் கிறிஸ்தவர்களின் இரத்தத்தால் குளிப்பாட்டியவன் என்ற அளவுக்கு வரலாற்றில் மிகவும் கீழாகச் சென்றான். பேரரசனை (தன்னை) வணங்கச் செய்வதை பலவந்தப்படுத்து வதற்காகவே நோக்கம் கொண்டு அவனது உபத்திரவங்கள் ஏற்பட்டிருந்தன...
>
> டொமீஷியனின் கீழாகக் கிறிஸ்தவமானது பேரரசின் வல்லமையினால் வாழ்வா சாவா என்ற போராட்டத்தில் இறங்க வேண்டியதாயிற்று, … தண்டனை பல வடிவங்களில் தரப்பட்டது. சிலர் கொல்லப்பட்டனர், சிலர் நாடு கடத்தப் பட்டனர், சிலர் பேரரசின் தெய்வீகத்தை அறிக்கையிடும்படி வாதிக்கப்பட்டனர், சிலர் சொத்துக்கள் பறி முதல் செய்யப் பட்டன, சிலர் இவைகள் எல்லாவற்றையும் மொத்தமாய் அநுபவித்தனர் … (Ray Summers, *Worthy Is the Lamb*).

அநேகமாக, டொமீஷியனின் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதி யில்தான் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது எழுதப் பட்டிருக்க வேண்டும் (கி.பி. 94-96). இதன் இரண்டாம் அதிகா ரமானது கிறிஸ்தவர்களை "மரண பரியந்தம் உண்மையாய் இரு" (வ. 10) என்று வற்புறுத்துகின்றது, மற்றும் இது பெர்கமு வில் (வ. 13) கொலை செய்யப்பட்ட "எனக்கு உண்மையுள்ள சாட்சியாகிய அந்திப்பா" [நேரடிப் பொருள் வேதசாட்சியாக

*மரணமடைந்தவர் என்பதாகும்] பற்றியும் பேசுகின்றது. அதிகாரம் 6ல், "... தேவ வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்ட ..." மற்றவர் களைக் குறித்துக் கூறப்படுகின்றது (வ. 9). அதிகாரம் பதினேழில், "பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசு வினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக்கிற மகா பாபிலோன்" என்ற வேசியைப் பற்றிய சித்தரிப்பு காணப்படுகின்றது (வ 1-6). (அந்த வேசி ஏழு மலைகளின் மேல் உட்கார்ந்திருக்கிறவளாய்க் காணப் படுவதால் [வ. 9] ஏழு மலைகளின் மேல் கட்டப்பட்ட ரோமாபுரி நகரம் என்று அவளை அடையாளப்படுத்தாமல் இருப்பது கடினமாகும்.)*

*பாரம்பரிய வரலாற்றின்படி, டொமீஷியனின் துன்புறுத்து தலின்போது கொல்லப்பட்டவர்களில் பவுலின் நண்பரும் துணைவருமான தீமோத்தேயுவும் ஒருவராயிருந்தார். பாரம் பரிய வரலாற்றின்படி பவுலின் இன்னொரு நெருங்கிய நண்பரான மருத்துவர் லூக்கா, நீரோவின் துன்புறுத்துதல் தொடர்பாக முன்னமே கொல்லப்பட்டிருந்தார். இந்தத் துன்புறுத்தலின்போது, உயிர் வாழ்ந்திருந்த ஒரே ஒரு அப்போஸ்தலரான யோவான் பத்மு தீவுக்கு நாடு கடத்தப் பட்டார், அங்கு அவர் "இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்து தலை" (வெளி. 1:1, 9) பெற்றுக் கொண்டார். பாரம்பரிய வரலாற்றின்படி, டொமீஷியனின் மரணத்திற்குப் பின் யோவான் எபேசு நகருக்குத் திரும்பி, ஏறக்குறைய நூறு வயதில் இயற்கையான மரணம் அடைந்தார்.*

*ரோமாபுரியின் தீவிரமான துன்புறுத்துதலானது சபையின் ஆவியை அழித்ததா? தேவனுடைய மக்களின் "நடபடிகள்" நின்று போயினவா? இரண்டாம் நூற்றாண்டின் கிறிஸ்தவ எழுத்தாளரான தெர்த்துல்லியன் ரோம அரசின் துன்புறுத்தலி னால் ஏற்பட்ட விளைவை விளக்கப்படுத்தினார்:*

> *நாங்கள் நேற்றைய மக்களாய் இருக்கின்றோம், இருந்தாலும் உங்களுக்குச் சொந்தமான நகரங்கள், தீவுகள், குகைகள், சிறு நகரங்கள், மக்கள் கூட்டங்கள், உங்கள் சொந்த முகாம், உங்கள் இனம், அரண்மனை, அரங்கசாலை போன்ற எல்லா இடங்களிலும் நிறைந்துள்ளோம் ... நீங்கள் கண்டுபிடித்த மிகச்*

*சீரான கொடுமைமிக்க தண்டனை எதனாலும் நீங்கள் சாதித்தது ஒன்றும் இல்லை, மாறாக அது எங்கள் பள்ளிக்கு (சபைக்கு) மனிதர்களை வெற்றி கொண்டது. நீங்கள் எங்களை வெட்டித் தள்ள நாங்கள் அதிகப்படுத்தப் படுகின்றோம். கிறிஸ்தவர்களின் (அல்லது வேதசாட்சிகளின்) இரத்தமே விதையாயிருக்கின்றது* (Quoted in Walker, 17).

## ஆண்டுகளினூடாகக் கிறிஸ்தவர்களின் தொடர் நடபடிகள்

*இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளின் போது, கிறிஸ்தவ வேதசாட்சிகளின் இரத்தமாகிய "விதை" ரோமப் பேரரசு முழுவதிலும் தாராளமாய் விதைக்கப்பட்டது. ஜான் ஃபோக்ஸ் அவர்கள் தமது புகழ் பெற்ற நூலாகிய வேதசாட்சி கள் பற்றிய ஃபோக்ஸின் புத்தகம் என்ற நூலில் ரோமப் பேரரசர்களின்கீழ் நடந்த பத்து துன்புறுத்தல்களை அட்டவணைப்படுத்துகின்றார்* (Marie Gentert King, ed., *Foxe's Book of Martyrs*). *ட்ரேஜன் என்ற பேரரசின் உபத்திரவப் படுத்தலின் கீழ், யோவானின் சீஷராயிருந்த இக்னேஷியஸ் ரோமாபுரிக்குக் கொண்டு வரப்பட்டு, போட்டிக் களத்தில் காட்டு மிருகங்களால் பட்சிக்கப்படும்படி விடப்பட்டார். மாற்குஸ் அவ்ரேலியஸ் என்பவரின் உபத்திரவப்படுத்தலின் போது, யோவானின் இன்னொரு சீஷரான முதிர் வயது போலிகார்ப் அவர்கள் ரோமாபுரிக்குக் கொண்டு வரப் பட்டார். மரண தண்டனை விதிக்கப்படுவதற்கு முன் கிறிஸ்துவைச் சபிக்கும்படிக்கு அவர் கட்டளை பெற்றார். அதற்கு அவர், "எண்பத்தியாறு வருடங்களாக நான் அவருக்கு ஊழியம் செய்திருக்கின்றேன், அவர் ஒரு போதும் என்னைத் துன்புறுத்தியதில்லை: அப்படியிருக்க எனது அரசரும் மீட்பருமான அவரை நான் எப்படி மறுதலிக்க முடியும்?" என்று பதில் அளித்தார்* (Polycarp *Martyrdom of Polycarp* 9). *ஏறக்குறைய அதே காலகட்டத்தில் ஜஸ்ட்டின் மார்ட்டியர் தம் விசுவாசத் திற்காகக் கொல்லப்பட்டார். செவெரஸ்ஸின் துன்புறுத்தலின் போது, குறிப்பிடத் தக்க இன்னொரு முன்னோடியான லயனஸ் நகரின் இரேனியுஸ் சிரச்சேதம் செய்யப்பட்டார். ஜான் ஃபோக்ஸினால் அட்டவணைப் படுத்தப்பட்ட மற்ற*

உபத்திரவங்கள் மேக்ஸிமஸ், டெஸியஸ், வலேரியன் மற்றும் மேக்ஸிமியன் ஆகியோரின் ஆட்சி காலங்களில் ஏற்பட்டன.

சபையின் தொடக்க நூற்றாண்டுகளில் உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்களின் வரலாறுகளைக் கூற இவ்விடமானது என்னை அனுமதிக்கும்படி நான் விரும்புகின்றேன்: ஆப்பிரிக்காவைச் சேர்ந்த இளம் தாயான பெர்ப்பெத்துவா என்பவள் போட்டிக் கூடத்தில் கொல்லப்பட்ட உள்ளமுடைக்கும் வரலாறு; தெபான் சேனை என்ற 6,666 கிறிஸ்தவப் படை வீரர்கள் காவ்ல் (பிரான்ஸ்) நாட்டில் கிறிஸ்தவத்தை ஒழிக்கும் பணியில் பேரரசருக்கு உதவாததினால் மற்ற படை வீரர்களினால் அவர்கள் பட்டயம் கொண்டு கண்டதுண்டமாக வெட்டுவிக்கப்பட்டார்கள் என்ற வரலாறு; இங்கிலாந்தின் முதல் வேதசாட்சியான அல்பான் - இவர் முதலில் தமக்குத் தண்டனை நிறைவேற்ற வந்தவர் அல்பானின் தைரியத்தைக் கண்டு மனமாற்றமடைந்தார் எனவே அல்பானுடன் இவரும் சேர்ந்து - தலைவெட்டப்பட்டார் என்ற வரலாறு மற்றும் இன்னும் பல வரலாறுகள் உள்ளன.

மறுபடியும் நான் கேட்கின்றேன்: இப்படிப்பட்ட நடத்துதலானது சபையை அழித்ததா? தேவனுடைய மக்களின் "நடபடிகள்" நின்று போனதா? ஒரு எழுத்தாளர் பின்வரும் குறிப்பை எழுதினார்:

> உபத்திரவத்தின் மத்தியில் பிறந்த சபையானது முதல் மூன்று நூற்றாண்டுகளில் அதன் (துன்பத்தின்) மரண நிழலில் இருந்து தப்ப முடியவில்லை. இருந்த போதிலும், ஒருவேளை, உபத்திரவத்தின் காரணத்தினாலேயே கூட, சபையானது தொடர்ந்து வளரலாயிற்று. துன்பத்தின் நெருப்பானது வெதுவெதுப்பான உறுதி நிலை உள்ள சபையாரையே அழித்தது, இவ்விதமாக உலகத்தார் அதைக் குறித்து (சபையைக் குறித்து) சகஜ நினைவு கொண்டிராமல் சபை தன்னைக் காத்துக் கொண்டது (Handbook of Church History).

தொடக்க காலக் கிறிஸ்தவர்களின் எண்ணப் போக்கிற்கான பலத்த சாட்சியத்தை ரோமாபுரியின் நிலத்தடிக் கல்லறைகளில் காண முடியும். இந்த நிலத்தடிக் கல்லறைகள் ரோமாபுரி நகரின் கீழ் மைல் கணக்கில் உள்ள நிலத்தடிச் சுரங்கப் பாதைகளின் வலைப் பின்னலாகவும், மற்றும் பல அறைக்

கூடங்களாகவும் உள்ளன. கிறிஸ்தவர்கள் தங்களின் மரித்தவர்களை அங்கு அடக்கம் செய்தார்கள், ஆராதனைக்காகக் கூடினார்கள், சில வேளைகளில் பாதுகாப்புப் பெற வேண்டி அங்கு ஓடி ஒளிந்தார்கள். மரித்தவர்கள் அடக்கம் செய்யப் பட்டிருந்த சுரங்கப் பாதையின் சுவர்களில் சித்திரங்களும், கல்வெட்டுக்களும் நிறைந்துள்ளன. இச்சுரங்கப் பாதைகளின் வழியாக நீங்கள் நடக்க முடிந்தால், ஆதிக் கிறிஸ்தவர்களால் வரையப்பட்ட புறா, நங்கூரம், கிரீடம் மற்றும் விசுவாசத்தின் மற்ற அடையாளங்களையும் நீங்கள் காண்பீர்கள். இயேசுவை நல்ல மேய்ப்பனாகச் சித்தரித்தவைகளையும் நீங்கள் பார்க்க முடியும். வதைபடுதல் பற்றிய படங்களையோ அல்லது தங்களைத் துன்புறுத்துவோருக்கெதிரான கோபத்தைச் சித்தரிக்கும் கல்வெட்டுக்களையோ நீங்கள் அங்கு காண மாட்டீர்கள். “அங்கு புலம்பலின் அடையாளமோ, பழி தீர்த்துக் கொள்ளும் வெளிப்பாடோ இல்லை; பெருந்தன்மை, உபகாரம் மற்றும் அன்பு ஆகிய சுவாசங்களே அங்கிருந்தன” (பெயர் அறியப்படாத ஆசிரியர் எழுதியது).

ரோமப் பேரரசர்களினால் கிறிஸ்தவர்களுக்கு இழைக்கப் பட்ட மாபெரும் கடைசி உபத்திரவமானது டயக்ளீஷியனால் நடந்ததாகும். 303ல் டயக்ளீஷியனும், கலேரியஸ் என்ற ஒரு உதவியாளரும் இணைந்து, சபைக் கட்டிடங்களை அழித்தல், சபை முன்னோடிகளைச் சிறையிடுதல், கிறிஸ்தவர்கள் பலி செலுத்தும்படி பலவந்தம் பண்ணுதல், கிறிஸ்தவ வேத வசன நூல்களைப் பறிமுதல் செய்தல் போன்ற செயல்களுக்குத் தொடர்ந்த கட்டளைகளை இட்டார்கள். இளம் உதவிக்கார ரான தீமோத்தேயு என்பவரும், திருமண வாழ்வில் அவருடன் இணைந்து மூன்று வாரங்களே ஆகியிருந்த அவரது மனைவி மவுராவும் தங்களிடம் இருந்த வேதாகமத்தின் பிரதியொன்றை எரித்துப் போடுவதற்குக் கொடுக்காதபடியினால் அருகருகாகச் சிலுவையில் அறையப்பட்டார்கள்.

டயக்ளீஷியனும், கலேரியஸும் தங்கள் தீவிரவாத நடவடிக்கைகளைச் செயல்படுத்தக் காத்திருந்த நீண்ட காலத்தில், சபையானது அங்கீகாரத்தை பலவந்தப்படுத்து மளவுக்குப் பெரியதாக வளர்ந்திருந்தது. 311ல், கலேரியஸ் இந்த உபத்திரவத்தை முடித்து வைத்தார். 313ல் காஸ்டன்டைன்

*மற்றும் லிஸினியஸ் ஆகியோரால் வெளியிடப்பட்ட "மிலன் பிரகடனமானது" கிறிஸ்தவத்துக்கு முழுமையான சட்டபூர்வ அந்தஸ்தைக் கொடுத்தது. 323ல், மகா கான்ஸ்டன்டைன் தனிப்பெரும் ஆட்சியாளரான பொழுது, ரோமப் பேரரசினால் சபைக்கு ஏற்பட்ட உபத்திரவம் முடிவுக்கு வந்தது.[6] யாரோ ஒருவர் கூறியபடி, "ரோம அரசானது ஒரு வாளுடன் கிறிஸ்தவத்தைச் சந்தித்தது, கிறிஸ்தவமோ அன்புடன் ரோமாபுரியைச் சந்தித்தது - அன்பே வென்றது."*

*சட்டபூர்வமான அங்கீகாரத்தைப் பெற்றது பலவித கலப்படமான ஆசீர்வாதங்களைக் கொண்டு வந்தது, ஏனென்றால் கான்ஸ்டஸ்டைனின் செல்வாக்கானது இயேசுவாலும், ஏவப்பட்ட எழுத்தாளர்களாலும் முன்னுரைக்கப்பட்டிருந்த விசுவாச விலக்கத்திற்கு வேகமூட்டியது (மத். 24:24; அப். 20:28-31; 2 தெச. 2:3-12; 1 தீமோ. 4:1-3; 2 தீமோ. 4:1-4; 2 பேது. 2:1, 2 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும்). இருப்பினும், விசுவாச விலக்கத்தைக் கண்டறிவதோ அல்லது சபையைப் பொறுத்தமட்டில் எழுந்த உபதேசப் பிழைகளைப் பார்ப்பதோ இப்பாடத்தின் நோக்கத்திற்குள் அமையவில்லை. மாறாக, (1) சபை எவ்வளவுதான் மோசடிக்கு உட்பட்டிருந்தாலும் "விசுவாசமுள்ள ஒரு சிலர்" எப்பொழுதுமே இருந்தார்கள் என்பதையும் (2) விசுவாசமுள்ளவர்கள் தேவனுக்கான "நடபடிகளில்" தொடர்ந்து செயல்பட்டார்கள் என்பதையும் மட்டும் நான் வலியுறுத்த விரும்புகின்றேன். வரலாற்றாளர் ஒருவர் பின்வரும் கருத்துக் கணிப்பைக் கொடுத்தார்:*

> *கிறிஸ்தவமானது ஒரு வகையான பரிசுத்தத் தொற்றாகப் பரவியது. முக்கியமான வர்த்தக வழிகளில் அதன் பாதையைக் கண்டறிய முடியும் ... ஒரு நகரத்தில் கிறிஸ்தவம் ஊன்றப்பட்ட உடன் அதன் அருகில் உள்ள மாவட்டத்திற்கு அது உணர முடியாத அளவுக்குப் பரவி புது வேர் பிடித்தது ... பித்தினியா - பொந்து நாட்டின் வடக்குக் கடற்பகுதி மாநிலத்தைப் பற்றிப் பேசும்போது பிளினி அவர்கள் "எல்லா வயதிலும் எல்லாப் பதவி நிலைகளிலும் இருந்த இரு பாலரான (ஆண், பெண்) கிறிஸ்தவர்கள் ஏராளமான எண்ணிக்கையில்" இருந்தார்கள் என்று குறிப்பிட்டார். மேலும் அவர், "ஏனென்றால் இந்த மூட*

> *நம்பிக்கைத் தொற்றானது நகரங்களை மட்டுமின்றி, கிராமங் களையும், நாட்டுப் புறங்களையும் ஊடுருவிற்று" என்றும் கூறுகின்றார்; எனவே கோவில்கள் கை விடப்பட்டன, சடங்காச்சாரங்கள் கடைபிடிக்கப்படவில்லை, பலியாகும் உயிர்கள் [பலி செலுத்தப்படும் விலங்குகள்] வாங்கப் படாதிருந்தன ...*
>
> *கிழக்கில், ஏறக்குறைய கி.பி. 200ம் ஆண்டு வாக்கில், அந்தியோக்கியாவுக்கு வட கிழக்கில் ஐப்பிராத்து நதிக்கு அப்பால் கிரேக்க மயமான ஒரு சிறிய தேசிய அரசின் தலை நகரான எடிஸ்ஸாவில் ... ஒரு அரசர் கிறிஸ்தவராயிருந்தார் ... அலெக்சந்திரியாவிலிருந்து சுவிசேஷமானது எகிப்து முழு வதிலும் மற்றும் மேற்கில் சிரேனே வரையிலும் பரவியது. மேற்கில் மட்டும் கார்த்தேஜைத் தலைநகரமாய்க் கொண்ட ஆப்பிரிக்காவின் முதன்மை மாகாணம் மற்றும் லயனஸை மையமாகக் கொண்ட தெற்கு கவுல் (பிரான்ஸ்) ஆகிய இரண்டு மாபெரும் நிலப்பகுதிகள் சேர்க்கப்பட்டன ... [இரண்டாம்] நூற்றாண்டின் முடிவில் முதன் முதலாய்க் கிறிஸ்தவர்களான ஸ்பானியர்களைப் பற்றி நாம் கேள்விப்படுகின்றோம்; பிரிட்டன் போன்ற தூரத்தில் இருந்த மாகாணங்களிலும் ... ரோமாபுரியிலும் கூட சில கிறிஸ்தவர்களைக் கண்டறியலாம்* (J. Vernon Bartlet, *Early Church History*).

*தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில் சில ஊழியர்களின் பெயர்கள் அழிவுறாமையைப் பெற்றன. பல ஆண்டுகளாக வசனத்தைப் பரப்பிய விசுவாசமிக்க கிறிஸ்தவர்களின் பெயர்கள் - தங்கள் விசுவாசத்திற்காகப் பல சமயங்களில் பாடநுபவித்தவர்கள் இவர்கள் - மனிதர்களின் வரலாற்றுக் குறிப்புகளில் பதிவு செய்யப்படவில்லை. இருந்தாலும், அவர்கள் யாரென்று தேவன் அறிவார், அவர் தம் மக்களின் "நடபடிகளை" தொடர்ந்து பதிவு செய்கின்றார்.*

## இன்றைய நாட்களில் தேவனுடைய மக்களின் தொடர் நடபடிகள்

*இடம் இருந்தால் நான் இவ்விடத்தில் புரொட்டொஸ் டண்டுகளின் மறுமலர்ச்சி பற்றியும், பல நாடுகளில் நடக்கின்ற மீளக்கட்டும் இயக்கம் பற்றியும் எழுதியிருக்க முடியும். சபையானது தனது பரிசுத்தம் மற்றும் தேவனுக்கு உண்மையா யிருத்தல் ஆகியவற்றைக் காத்துக் கொள்ளத் தொடர்ந்து*

போராட வேண்டியதாய் இருந்தது. மற்றும் சபையில் எனது அரை நூற்றாண்டுக் காலத்தில் நான் அறிந்துள்ள தேவபக்தி யுள்ள கிறிஸ்தவர்களைப் பற்றியும் கூறியிருக்க முடியும், இவர்கள் கர்த்தருக்கும் அவரது வசனத்திற்கும் தங்களை ஒப்புக் கொடுத்து, உலக முழுவதிலும் வாழ்கின்ற ஆண்கள் மற்றும் பெண்கள் ஆவார்கள்.[7] இந்த வார்த்தைகளை எழுதும் போதே பெயர்கள் மற்றும் முகங்கள் ஆகியவை என் சிந்தனையில் பெருக்கெடுத்தோடுகின்றன. இருந்தாலும், கர்த்தர் தமது சபை களின் மத்தியில் உலவுகின்றார் (வெளி. 1:13, 20; 2:1), அவர் இன்னமும் தமது எல்லாப் பிள்ளைகளையும் "அறிந்துள்ளார்" (வெளி. 2:2, 9, 13, 19 முதலியன) மற்றும் அவர் இன்னமும் அவர்களின் ''நடபடிகளைப்'' பதிவு செய்கின்றார் என்று வலியுறுத்துவதுடன் நான் மனநிறைவு அடைய வேண்டியதாய் இருக்கின்றது.

இன்றைக்கான சத்தியம் பத்திரிகை செல்கின்ற நாடுகளில் எல்லாம் இப்பொழுதே, எல்லாக் காலங்களிலும் மிகவும் உணர்வெழுச்சியான ''நடபடிகள்'' நடந்தேறுகின்றன. நைஜீரியா, மற்ற ஆப்பிரிக்க நாடுகள், இந்தியா மற்றும் பல நாடுகளில் நடக்கின்ற ஆத்தும அறுவடைக்காக நாங்கள் தொடர்ந்து அகம் மகிழுகின்றோம். தேவனுடைய அரியணை யைச் சுற்றி நாம் கூடும் போது இந்த "அதிகாரங்கள்" வாசிக்கப் படுவது நமக்கு எவ்வளவு மனமகிழ்ச்சியைத் தருவதாயிருக்கும்! பரலோகத்தின் பதிவேட்டில் உங்கள் அதிகாரத்தை வாசிக்க நான் மிகவும் ஆவலுடன் எதிர் நோக்கியிருக்கின்றேன்!

கிழக்கு ஐரோப்பிய நாட்டில் தேவன் திறந்துள்ள கதவு களைக் கண்டு நான் பெரும் வியப்படைகின்றேன். நானும் என் மனைவியும் இப்பொழுதுதான் ரோமானியாவில் ஒரு மாதம் தங்கியிருந்து திரும்பினோம். அங்கு எனது மகள் சிந்தி மற்றும் அவளது குடும்பத்தார் வசிக்கின்றார்கள். எனது சகோதரர் காய் அவர்கள் போலந்தில் ஒரு மாதம் போதிப்பதற்காக நேற்றுத் தான் புறப்பட்டுச் சென்றார். எனது நல்ல நண்பர்களில் சிலரான கெய்த், டாம்மி அவேரி மற்றும் அவர்களின் பிள்ளைகள் சமீபத்தில் பெலராஸ் சென்றார்கள். இன்றைக் கான சத்தியத்தின் பதிப்பாசிரியர் எடி க்ளோயர், அவரது மனைவி சூசன் - மற்றும் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்கள் -

*பல கோடை காலங்களில் உக்ரெய்ன் நாட்டில் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். இருப்பத்தியோராம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்களுடைய "நடபடிகளை" மட்டும் பதிவு செய்வதற்குப் பரலோக நூலின் பக்கங்கள் எத்தனை தேவைப்படும் என்பதை என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை!*

*அடுத்த நூற்றாண்டு தொடங்கு முன் கர்த்தர் மறுபடியும் வருகை தராதிருந்தால், அந்த நூற்றாண்டின் அறைகூவலானது முதலாம் நூற்றாண்டில் இருந்தது போலவே இருக்கும்: "சகல ஜாதிகளையும் சீஷராக்குவதற்கு" "உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" மற்றும் "பூமியின் கடைசி பரியந்தமும் செல்லுங்கள்" (மத். 28:19; மாற். 16:15; அப். 1:8). பவுலும் மற்றவர்களும் முதலாம் நூற்றாண்டில் அந்த அறைகூவலை நிறைவேற்ற தேவன் உதவியது போலவே, நமக்கும் அவர் உதவுவாராக! நம்மைப் பற்றி உணர்வெழுச்சி மிக்க சிலவற்றைத் தேவன் எழுதும்படி நாம் கொடுப்போமாக![8]*

## பிரசங்கக் குறிப்புகள்

*நடபடிகள் புத்தகத்தின் தொடர் பாடமாக "அதிகாரம் 29" என்பதைப் பல பிரசங்கியார்களும், போதகர்களும் முன் வைத்திருக்கின்றார்கள். நடபடிகளின் 28ம் அதிகாரமானது தேவனுடைய ஊழியர்களது "நடபடிகளின்" முடிவு அல்ல என்பதை வலியுறுத்துவதற்கு இத்தலைப்பை அவர்கள் பயன் படுத்துகின்றார்கள்.*

---

*குறிப்புகள்*

[1]J. W. McGarvey, *New Commentary on Acts of Apostles,* vol. 2, 292. [2]*பவுலினால் உரைக்கப்பட்ட "முதல் தற்காப்பு வாதம்" பற்றி கணிசமான அளவில் மாறுபாடுள்ள கருத்துக்கள் உள்ளன, ஆனால் இது அநேகமாக சமீபத்திய நிகழ்ச்சியொன்றை - ஒருவேளை விசாரணைக்கு முன்பு நடைபெற்ற ஆரம்பகட்ட விசாரணையைக் - குறிப்பதாயிருக்கலாம்.* [3]*இப்பாடத்தில்*

விவாதிக்கப்படும் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள் வேதவசனப் பகுதிகளில் உள்ளடங்கவில்லை. ஆகையால் இந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய ஆதிக் கிறிஸ்தவர்களில் ஏவப்பட்டிராத எழுத்துக்கும், உண்மைகள் மற்றும் தொடக்ககால நம்பிக்கைகள் பற்றிய உலக வரலாற்றாளர்களின் பதிவுகளுக்கும் நான் திரும்பியுள்ளேன். தேவனுடைய ஏவுதல் பெற்ற பதிவுகளைப் போல அவ்வளவு நம்பிக்கைக்குரியவைகளாக இந்தப் "பாரம்பரியங்கள்" இருப்பதில்லை. [4]"பாபிலோன்" என்பது ரோமாபுரியை மறைமுகமாய்க் குறிப்பிடும் வழிமுறையாகும் என்று சிலர் நம்புகின்றனர், ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் (வெளி. 17:5, 9, 10) எழுதப்படும் வரை ரோமாபுரியானது பாபிலோன் என்று ஒருபொழுதாவது குறிப்பிடப் பட்டதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. அத்துடன் 1 பேதுரு 5:13 வசனமானது உருவக நடையுடையது என்பதற்கான சுட்டிக் காட்டுதலும் இல்லை. முதலாம் நூற்றாண்டில் ஐப்பிராத்து நதிக்கரையில் பாபிலோன் என்ற ஒரு சிறிய நகரம் இருந்தது. பேதுரு தம் முதல் நிருபத்தை எழுதியபோது அந்நகரில் இருந்திருக்கலாம். பவுல் ரோமருக்கு நிருபத்தை எழுதியபோது பேதுரு ரோமாபுரியில் இருந்ததில்லை என்று ஓரளவு நிச்சயமாக நாம் கூற முடியும். அவர் அங்கு இருந்திருந்தால் நிச்சயமாகப் பவுல் அதைக் குறிப்பிட்டிருப்பாரல்லவா? பேதுரு தமது வாழ்வின் முடிவு காலத்தில் ரோமாபுரி சென்று அங்கு மரணமடைந்தார் என்று ஒரு பாரம் பரியம் உள்ளது. ஒருவேளை அவர் அப்படிச் சென்றிருக்கலாம். [5]யூதர்களும் வாய்ப்புப் பெற்றிருந்ததால் தொடர்ந்து கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி னார்கள் (வெளி. 2:9, 10); ஆனால் கி.பி. 70ல் எருசலேமின் அழிவுக்குப் பிறகு அவர்களால் ஒன்றுபட்ட சக்தியாகத் தொடர்ந்து இருக்க முடியாமல் போயிற்று. [6]இது கிறிஸ்தவர்களுக்கெதிரான எல்லா உபத்திரவமும் முடிந்து போயிற்று என்று அர்த்தப்படுவதில்லை. தேவனுடைய மார்க்கத்திற்காக எழுந்து நிற்பவர்கள் யாவரும் ஏதாவதொரு வழியில் எப்பொழுதுமே துன்புறுத்தப்படுகின்றார்கள். [7]இப்பாடமானது ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், உள்ளூர் சபையின் கிறிஸ்தவர்களின் நடபடிகளுக் கான ஆவியை வெளிப்படுத்திய "சாதாரண" கிறிஸ்தவர்களின் எஞ்சிய செயல்பாடுகள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்வது ஏற்புடையதாய் இருக்கும். [8]இப்பாடமானது ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், கேட்பவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளும்படி உற்சாகப்படுத்துதல் வேண்டும். அவர்களின் பதில்செயல் (அல்லது பதில்செயல் செய்யாமை) என்பதும் பரலோகத்தின் பதிவில் ஒரு பாகமாகும் என்பது குறிப்பிடப்படலாம்.



பவுலின் கடைசிப்
பயணங்களின் காட்சி
கவுல் (பிரான்ஸ்)
ஸ்பானியா
கார்த்தேஜ்
நோவா
டிங்கஸ்
ரோமாபுரி
இத்தாலி
கோர்சிகா
சர்தீனியா
நிக்கொப்போலி
கார்த்தேஜ்
சிசிலி
சீர்க்கூசா
மெலித்தா
தல்மாத்தியா
ஆதிரியாக் கடல்
மக்கெதோனியா
பிலிப்பி
திரேஸ்
கருங் கடல்
பைசாந்தியம்
பொந்து &
பித்தினியா
துரோவா
ஏஜியன்
கடல்
அகாயா
கொரிந்து
எபேசு
மிலேத்து
ஆசியா
கலாத்தியா
கப்பதோக்கியா
கொலோசே
லீசியா
பம்பலியா
சிலிசியா
தர்சு
அந்தியோகியா
சீப்புரு தீவு
சீரியா
கிரேத்தா
மத்தியதரைக் கடல்
கொரிந்து
எருசலேம்
அலெக்சந்திரியா
எகிப்து

# *பவுலின் கடைசிப் பயணங்களும் மரணமும்*

*நடபடிகளின் முடிவில் லூக்கா பவுலைச் சிறையில் விட்டுச் சென்றாலும் புதிய ஏற்பாட்டின் மூன்று புத்தகங்கள் பவுலின் தொடர் செயல்பாடுகள் பற்றிய சிறு குறிப்புகளைத் தருகின்றன. 1 மற்றும் 2 தீமோத்தேயு மற்றும் தீத்து ஆகிய இம்மூன்று புத்தகங்கள் பவுலின்கீழ் பயிற்சிபெற்று ஊழியம் செய்திருந்த சபையின் இரண்டு இளம் முன்னோடிகளுக்கு எழுதப்பட்டன.*

*முடிந்தால் ஸ்பானியா செல்லலாம் என்று பவுல் விரும்பி யிருந்ததை நாம் அறிவோம் (ரோமர் 15:24, 28), சபையின் வரலாற்றாளரான ஈசுபியஸ் (*ca. *கி.பி. 275-339) அவர்கள், பவுல் ஒரு காலகட்டத்தில் தம் ரோமச் சிறையிருப்பில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்று மறைமுகமாய்க் குறிப்பிட்டார். அத்துடன் கூடுதலாக, பவுல் சுவிசேஷத்தை எடுத்துக் கொண்டு ஸ்பானியாவுக்குச் சென்ற விபரம் ஆதிக் கிறிஸ்தவ இலக்கியத்தில் அடங்கியுள்ளது. கி.பி. 96ம் ஆண்டளவில் ரோமாபுரியைச் சேர்ந்த கிளமெண்ட் என்பவர் கொரிந்தியர் களுக்குப் பின்வருமாறு எழுதினார்:*

> *... ஏழு முறை சிறைப்பிடிக்கப்பட்டு, ஓடிவிடும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டு, கல்லெறியுண்டு இவைகள் எல்லா வற்றிலும் பவுல் பொறுமையுடன் கூடிய சகிப்புத் தன்மைக்காக வெகுமதியையும் சம்பாதித்தார். கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய இரு திசைகளிலும் பிரசங்கித்த பிறகு, அவர் தம் விசுவாசத் தினால் மிகச் சிறந்த புகழை ஆதாயப்படுத்திக் கொண்டார், முழு உலகிற்கும் அவர் நீதியைப் போதித்தார். மேற்கின் எல்லையோரப் பகுதிக்கு வந்த அவர், சட்டங்களின் கீழ் வேதசாட்சியாக மரித்தார். இவ்விதமாய் அவர் உலகிலிருந்து நீக்கப்பட்டார், மற்றும் அவர் பரிசுத்த இடத்திற்குச் சென்றார். பொறுமையின் தனிச் சிறந்த உதாரணமாக அவர் தம்மையை அளித்திருக்கின்றார்* (1 Clement 5).

*தீத்துவுக்கு எழுதிய போது, பவுல் ரோமானியரின் கட்டு களில் இருந்து விடுதலையாகியிருந்தார். அவர் சமீபத்தில்தான் (விடுதலையான பின் தீத்து நிருபத்தை எழுதுமுன்) தீமோத்*

தேயுவை எபேசுவில் விட்டு வந்தார் (1 தீமோ. 1:3), மற்றும் அவர் கிரேத்தாவில் சற்றுக் காலம் இருந்தபின் தீத்துவை அங்கே விட்டு வந்தார் என்றும் காணப்படுகின்றது (தீத்து 1:5). மறுபடியும் அவர் தீத்துவை, கிரேத்தாவிலிருந்து தல்மாத்தியா செல்லும் வழியில் இருந்ததும், அவர் மாரிக்காலத்தில் தங்கியிருக்க விரும்பியிருந்த நகருமான நிக்கொப்போலியில் சந்திக்க விரும்பினார் (தீத்து 3:12). பிற்பாடு தீத்து தல்மாத்தியாவுக்குச் சென்றார் என்று நாம் அறிகின்றோம் (2 தீமோ. 4:10), ஆனால் தீத்து பயணத்தைத் தொடரு முன்பு, பவுலும் அவரும் தங்களின் முந்திய திட்டத்தின்படி சந்தித்தார்களா இல்லையா என்பதை நாம் உறுதியாக அறிய முடியவில்லை.

பவுல் 2 தீமோத்தேயு நிருபத்தை எழுதுகையில் மறுபடியும் ரோமச் சிறையில் இருந்தவராகவும், ஏற்கனவே ஒரு விசாரணையைச் சந்தித்தவராகவும் இருந்தார் (2 தீமோ. 4:16, 17). அநேகமாக அவர் நீண்ட நாள் சிறைப்பட்டிருக்கவில்லை, ஏனென்றால் அவர் அப்போதுதான் பயணம் செய்திருந்தார் என்று ஆதாரங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன. அவர் தம் மேலங்கியையும், தோற்சுருள்களையும் துரோவாவில் விட்டு வந்திருந்தார் (2 தீமோ. 4:13) மற்றும் அவர் சற்றுக்காலம் முன்பு தான் மிலேத்து மற்றும் கொரிந்துவில் இருந்த தம் நண்பர்களை விட்டுப் பிரிந்து வந்திருந்தார் (2 தீமோ. 4:20). அவர் எபேசுவிலும் இருந்திருக்கலாம் (2 தீமோ. 4:14, 15) மற்றும் அவர் அங்கு தீமைகளை எதிர்கொண்டிருக்கவும் வாய்ப்பிருந்தது. 2 தீமோத்தேயுதான் பவுலின் கடைசி நிருபம் என்பது உறுதியாகும். அதன் வார்த்தைகள் பவுலின் கடைசி விருப்பம் மற்றும் உயிலாக இருக்கின்றன. நிச்சயிக்கப்பட்ட மரணத்தின் முன்னிலையிலும்கூட அவைகளில் மனத்தைத் தொடும் வேண்டுகோள்கள், ரீங்காரமிடும் கட்டளைகள் மற்றும் வெற்றியின் குறிப்பு ஆகியவை பின்னிப் பிணைந்துள்ளன (R. N. Longenecker, “Paul, the Apostle”).

பவுல் மறுபடியும் கைது செய்யப்பட்டது அநேகமாக கி.பி. 67ல் நடந்திருக்கலாம். நீரோவின் கட்டளைப்படி அவர் அந்த ஆண்டில் ரோமாபுரியில் தலை வெட்டப்பட்டு மரித்ததாக ஏவப்பட்டிராத பாரம்பரியம் கூறுகின்றது.